செய்தி வெளியீடு எண் : 14 நாள் : 08.05.2018

***தேனி மாவட்டம்,***
***சின்னமனூர் ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.***

தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முத்துலாபுரம், கன்னிசேர்வைப்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை இன்று (08.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முத்துலாபுரம் ஊராட்சயில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி அலுவலக கட்டட கட்டுமானப்பணி, முதலமைச்சரின் சூரிய ஒளி சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பசுமை வீடு கட்டுமானப்பணி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை கட்டுமானப்பணி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மைய கட்டட கட்டுமானப்பணி, முத்துலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட பரமத்தேவன்பட்டி கிராமத்தில் பாரத பிரதம மந்திரி ஆவேஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.1.70 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடு கட்டுமானப்பணி, கன்னிசேர்வைபட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டட கட்டுமானப்பணி ஆகிய பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசு ஊராட்சி பகுதிகளில் வாழ்கின்ற கிராமப்புற மக்களின் நலனை கருத்தில் கொண்டு, நகர்புறங்களில் கிடைக்கப்பெறும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கிராமப்புறங்களில் செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழக அரசு தமிழகத்தை சுத்தமான, சுகாதாரமான மாநிலமாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கிராமப்புற பகுதிகளில் வீடுகள் இல்லாத நபர்களை கண்டறிந்து அவர்களுக்கு முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி வழங்கப்பட்டு வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், கிராம ஊராட்சிகளில் பெறப்படும் மற்றும் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என பிரித்து உடனுக்குடன் அகற்றிடவும், ஊராட்சிப் பகுதிகளில் சாலைகள், மின்விளக்கு மற்றும் குடிநீர் வசதிகளை முறையாக பராமரித்திடவும், மழை நீர் மற்றும் கழிவு நீர் வெளியேறும் வாய்க்கால்களை தூய்மையாக பராமரித்திடவும், கழிப்பறை பயன்படுத்துவது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் செல்வி கவிதா அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி அபிதாஹனீப் அவர்கள், உதவி செயற்பொறியாளர் திரு.ஜோதி அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி ஆண்டாள் அவர்கள், திரு.பாஸ்கரன் அவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**